[திரு. எ. அருணாசலம்] [1987 ஏப்ரல் 28

செய்யாததால் சங்கத்தின் உற்பத்தி பாதிக்கப்பட்டது. மேலும், கல் அரைக்கும் இயந்திரம் பழுதுபட்டு, அதைச் சரிபடுத்த கூடுதல் செலவினம் ஏற்பட்டது. ஆகவே, சங்கம் லாபத்தில் இயங்க இயலவில்லை. தற்பொழுது இயந்திரம் பழுதுபார்க்கப் பட்டு நல்ல நிலையில் இயங்கி வருகின்றது. உடைக்கப்பட்ட பெருங்கற்கள் யாவும் தற்பொழுது இயந்திரத்திற்கு அருகில் கொண்டுவந்து குவிக்கப்பட்டுள்ளது. பணி செய்யும் உறுப் பினர்கள் யாவரும் இனி தொடர்ந்து சங்கத்தில் பணிபுரிய அறிவுறுத்தப்பட்டுள்ளனர். எனவே, இனி உற்பத்தி பெருகி, சங்கம் லாபத்தில் இயங்கக்கூடிய வாய்ப்புகள் உள்ளன.

(4) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தமிழ்நாடு மாநகராட்சி சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"1987-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சி சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சித் தேர்தலை இன்னும் ஓராண்டு நீட்டிப் பதற்கு வழிவகை செய்யும் அளவிலே இச்சட்டமுன்வடிவு இங்கே அறிமுகம் ஆவதால், அறிமுக நிலையிலேயே நான் எதிர்க்கிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை நான் அறிமுக நிலையிலேயே என் எதிர்க்கிறேன் என்பதற்கான ஒரு விளக்கத்தை இங்கே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விரிவாகப் பேசுவதை விவாதத்தின்போது வைத்துக்கொள்ளலாம். You record your objection, if any.

1987 ஏப்ரல் 28] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பொறுத்தவரையில் மாநகராட்சி தேர்தலை இன்னும் ஓராண்டுக் காலத்திற்கு நீட்டிப்பதற்கான காரணங்களைப் பொறுத்தவரையில் ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். சென்ற ஆண்டு இதனை நீட்டிப்பதற்கு என்ன காரணம் சொல்லப்பட்டதோ அதே காரணத்தை இந்த ஆண்டும் சொல்லி இதனை அறிமுகம் செய்திருக்கிறார்கள். மாநகராட்சிக்கு தேர்தல் நடத்தப்படாததால், மக்கள் பிரதிநிதிகள் இல்லாத நிலையில் மக்கள் பலவிதமான பாதிப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள். சுகாதார வசதி, குடிதண்ணீர் போன்ற வசதிகளை எல்லாம் மக்கள் பிரதிநிதிகள் இல்லாததால் மக்கள் பெற முடியாத சூழ்நிலை இருக்கிறது. அதனால், மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, உடனடியாக தேர்தலை நடத்த அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இங்கே சொல்லப்பட்டுள்ள காரண காரிய விளக்கங்களைப் பொறுத்தவரையிலும்கூட தேர்தலை நடத்திவிட்டு கூட இச்சட்ட முன்வடிவைக் கொண்டு வரலாம். ஏற்கெனவே உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலின்போது அவ்வாறு செய்திருக்கிறோம். முன்பு சட்டத்தைத் திருத்த வழியில்லாத நிலையில், சட்டத்தை பின்னால் திருத்தலாம் என்று சொல்லிவிட்டு இந்த அரசு எப்படி உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலை நடத்தியதோ அதுபோல இந்த மாநகராட்சிக்கான தேர்தலையும் முதலில் நடத்திவிட்டு, பிறகு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வரலாம். ஆகவேதான் நான் இதனை இன்ட்ரடக்ஷன் நிலையிலேயே எதிர்க்கிறேன்.

திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வரும் நிலையில் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் மாநகராட்சியில் அங்கம் பெறுகின்ற வாய்ப்பு இல்லாமல் இருப்பதால், மாநகராட்சியில் நடைபெற வேண்டிய பல்வேறு பணிகள், பொது சுகாதாரம் போன்ற பணிகள் எல்லாம் தடைப்பட்டிருப்பதால் இச்சட்டமுன்வடிவை நான் அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறேன்.

திரு எ. தெய்வநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சி சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுக நிலையிலேயே நான் எதிர்க்கின்றேன்.

(முற்பகல் 11-30)

திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாநகராட்சிகளுக்கு நடைபெற இருக்கின்ற தேர்தலை ஒரு ஆண்டு தள்ளி வைக்கிற சட்டத்தை ஆரம்ப நிலையிலேயே எதிர்க்கிறோம்.

திரு. வை. பாலச்சந்திரன்: தலைவரவர்களே, இந்தச் சட்டத்தை அறிமுக நிலையிலே நான் எதிர்க்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, கடந்த ஆண்டும், இந்த ஆண்டும் ஒரே காரணம்தான் என்றாலும், காரணம் ஒன்றானாலும் காலமும் வேறு, கர்த்தாவும் வேறு. அறிமுக நிலையில் அனைவரும் எதிர்த்ததற்கு ஆய்வு நிலையில் ஒருமுகமாகப் பதில் தருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சி சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஆ) அழகப்பா பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1987 ஆம் ஆண்டு அழகப்பா பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.